பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி 28ஞாயிற்றுக்கிழமை(13-08-1995)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்261

# அத்தியாவசிய மருந்து வகைகளை எடுத்து வரவும் அனுமதி மறுப்பு!

## சுகாதாரச் சீர்கேட்டால் வடக்கில் பேரழிவு ஏற்படும் அபாயம் வரலாம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13

வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்களை ஏற்றி வருவதற்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிககின்றன.

ஏற்புவலி, விசர்நாய்க்கடி, குக்கல், தொண்டைக்கரப்பன், போலியோ போன்ற நோய்களுக்கான தடுப்பூசி மருந்துகள் உட்பட அத்தியாவசிய — அவசர — மருந்து வகைகளை எடுத்து வருவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதை அடுத்து, யாழ். குடாநாட்டின் சுகாதார நிலைமை முன்னெப்போதுமில்லாதவாறு ஆபத்தான கட்டத்தை அடையும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் நோய் வாய்ப்படும் மக்களை அவற்றிலிருந்து குணமடையாது சாகடிக்க வைக்கும் வகையிலும்—

குடாநாட்டில் தொற்று நோய்கள் பரவி, சுகாதாரச் சீர்கேட்டுநிலை உருவாகி பெரும் அழிவு ஏற்பட வழி வகுக்கும் வகையிலும்—

ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகச் [5 ஆம் பக்கம் பார்க்க]

## தனி நபர்கள் எவரிடமும் பணம் செலுத்தாதீர்கள்!

### நிதிப் பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 13

ஏமாற்றுப்பேர்வழிகள் சிலர் நாம் தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவதில் ஈடுபட்டு வந்ததாக சில இடங்களில் காசு கேட்டமை எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே எந்தத் தனி நபரிடமும் காசு கொடுக்க வேண்டாம் என அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

— தமிழீழ நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்குக் காசு கொடுக்க விரும்புவோரின் வசதிக்காகப் பல்வேறு இடங்களிலும் செயலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இச்செயலகங்களில் காசினைக் கொடுத்து அதற்கான பற்றுத்துண்டைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நிதி திரட்டுவதற்கென அமர்த்தப்பட்ட நிதித்துறையைச் சேர்ந்த இயக்க உறுப்பினர்களிடம் உரிய செயலகங்களில், அல்லது அவர்களால் பொது அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்படும் பொது இடமொன்றில் குறிப்பிடப்படும் நேரத்தில் (6 ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள் விவரம் 5 ஆம் பக்கத்தில்

## மட்டக்களப்பில் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 13

மட்டக்களப்பின் கடற்கரையோரக் கிராமங்கள் இரண்டின் மீது படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டு அப்பாவித் தமிழர்களை கைதுசெய்துள்ளனர்.

மயிலம்பாவெளி, சவுக்கடி ஆகிய இரண்டு கிராமங்களும் கடந்த புதனன்று தேடுதல் நடவடிக்கைக்கு உள்ளாகின.

பல முகாம்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

காலை 5 மணிக்கு கிராமங்களுக்குள் புகுந்த படையினர், மக்கள் அனைவரையும் வீடு (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே இனப்பிரச்சினைத் தீர்வு இருக்கும்

### சந்திரிகா கூறுகிறார்

கண்டி, ஒக. 13

இனப் பிரச்சினைக்குரிய தீர்வு ஒற்றையாட்சி முறைக்கு உட்பட்டதாகவே இருக்கும். அந்த தீர்வை நடைமுறைப் படுத்துவதற்கு எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். இத்தீர்வு வெற்றிகரமாக நிறைவேறமும்மணிவகளின் ஆசியும் கிடைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

கண்டி எசல பெரஹரா நிறைவெய்தியதை தலதா மாளிகையின் தியவாதன நிலமே நாட்டின் தலைவருக்கு (ஜனாதிபதிக்கு) உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வைபவம் நேற்று கண்டியில் உள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

அந்த வைபவத்தில் பேசுகையிலேயே சந்திரிகா முன் கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது நடைபெறும் போர் இந்த வருட இறுதிக்குள் முடிவடைந்துவிடும். போர் முடிந்த கையோடு (5 ஆம் பக்கம் பார்க்க)

## 80 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

யாழ்ப்பாணம், ஒக. 13

கொழும்பு நகர்ப் புறத்தில் மட்டும் சென்ற வியாழக்கிழமை 80 தமிழ் இளைஞர்கள் ஸ்ரீலங்கா பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின் இந்த 80 பேரும் கைதாகினர். அதே சமயம் கொழும்புக்கு வெளியே கைதான 11 பேர் கொழும்புப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [இ-4]

## தீர்வுத் திட்டம் குறித்து ஈ.பி.டி.பி. விளக்குமாம்

கொழும்பு, ஒக. 13

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை வடபகுதி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான நடவடிக்கைகளை ஈ.பி.டி.பி.எடுத்துள்ளதாக அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை அடுத்த சில தினங்களுக்குள் தனது கட்சி ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலமே சிறந்த பலனை அடைய முடியும் என்றும் அவர் கூறினார். (எ)

# பொய்ப்பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகாவின்வேடம் கலைந்தது!

## "வெரித்தாஸ்" வானொலி கருத்து

மணிலா, ஒக. 13

இனவாதப் போருக்கு எதிராகப் பிரசாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாதிபதி சந்திரிகாவின் உண்மை வேடம் கலைந்து விட்டது; உண்மைச் சாயம் வெளுத்து விட்டது.

"வெரித்தாஸ்" வானொலி இவ்வாறு தெரிவித்தது.

இலங்கையில் அமைதிக்கான அதிகாரப் பரவலாக்கலின் அவல நிலை" என்ற தலைப்பில் வெளியான "உண்மையின் எண்ணங்கள்" நிகழ்ச்சியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஜூலை 15 க்கு முன் ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக ஆட்சிக்கு வந்தவுடன் கூறியிருந்த சந்திரிகா அதற்குப் பதிலாக பெரும் போர் தயாரிப்பில் ஈடுபட்டு —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரை நடத்தி முன்னர் அளித்த வாக்குறுதியை மக்களும், சர்வதேசமும் மறக்கக் கூடிய அளவுக்கு கவனத்தை திசை திருப்ப முயன்றுள்ளார்.

ஜனநாயகம், மனிதாபிமானம், இனசமத்துவம் என தான் அணிந்த முகமூடியை சந்திரிகா இப்போது தானே (6 ஆம் பக்கம் பார்க்க)

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

# முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன...

நீங்களும் ஒரு தொழிற்றுறைப் பட்டதாரியாய் உருவெடுக்க மிகச் சுளுவான மார்க்கத்தை நாங்கள் சமைக்கின்றோம். இங்கே தொடங்கும் பயிற்சி நெறி உங்களை திறந்த பல்கலைக் கழகத்திற்கு பாடவிதான விலக்குகளுடன் இட்டுச்செல்லும். மாணவர்களே! தொடர்புகள் அறுந்து போயுள்ள காலத்தில் இது ஓர் அற்புத வாய்ப்பு. வசப்படுத்திக் கொள்ளுங்கள்!!

## TECHNICIAN DIPLOMA COURSES
(ENGLISH MEDIUM)

(இப் பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Civil Engineering & Quantity Surveying
2. Electronics & Electrical Engineering
3. Mechanical Engineering

Duration 3 years
Educational Qualification: Six Subjects in G.C.E. (O/L) including Maths – C, Science – C, English – S

We guide you through the simplest path to emerge as a "Graduate in Technology"

Our Courses lead you to the open University of Sri Lanka with exemptions!

At a state of total breakdown in communication, it's a fine opportunity!

It's your's If you are looking for it!

## DIPLOMA COURSES
(ENGLISH MEDIUM)

(இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையிலும் நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளையிலும் நடத்தப்படும்)

1. Civil Draughtsmanship — 1 Year
2. Computer Programming & Data Processing — 1 Year
(Basic, Cobal, d-Base III+ & Pascal)—Practicals on IBM - PCAT & MAT 385 industrial Controller
3. Advanced Diploma in Computing — 1 Year
[Syllabus includes British Computer Society & Australian Computer Society Syllabii]

**Educational qualification,**

Six Passes in G.C.E. (O/L) with Maths-C & English - S and for advanced computing, two Passes in G.C.E. (A/L)

## TECHNICIAN CERTIFICATE COURSES
(ENGLISH MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Air Conditioning & Refrigeration — 1½ years
2. Radio & T.V. Servicing — 1 year
3. Automobile Technology — 1 year

Educational qualification:
G.C.E. (O/L) with Maths & Science - S

## CRAFT COURSES
(TAMIL MEDIUM)

[வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்]

1. Machine Shop Practice — 1 year
[இயந்திரப் பட்டறைப் பயிற்சி]
2. Electrical Wiring & Installation Practice — 1 year
(மின்னிணைப்பும் நிர்மாணமும்)
3. Welding Practice. 1 year
(உலோக ஒட்டுவேலைப் பயிற்சி)

கல்வித்தகைமை: க.பொ.த- (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

இதரவசதிகள்:

1. நூலகம்
2. விடுதி (இருபாலாருக்கும்) தனித்தனியே
3. விளையாட்டுத்துறை (இதில் ஆர்வமுள்ளோர்க்கு விசேட பயிற்சி மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.)

விண்ணப்பப்படிவம்:- ரூபா 40-00 செலுத்தி தோ. நு. கல்லூரியின் வட்டுக்கோட்டை காரியாலயத்திலும், யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையத்திலும் (யாழ். பொது மருத்துவமனை முன்பாக) பெற்றுக் கொள்ளலாம். நேர்முகப் பரீட்சை ஆவணி 29ஆம் 30ஆம் திகதி வட்டுக்கோட்டை விலாசத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறும்

க.பொ.த. [உ/த] ஓகஸ்ட் 95 பரீட்சார்த்திகளுக்கு இப்பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

பயிற்சி நெறிகள் செப்ரெம்பரில் ஆரம்பிக்கவுள்ளன.

★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

(சி- 1982)

**DIRECTOR**


# புலிகளின் குரல் வானொலியில்

**13 – 08 – 1995**

**ஞாயிறு இரவு**

★ 8-02 — இசையரங்கம் — பாடுபவர்: திரு. பெரியதம்பி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதிய 'இலங்கைமண்' 6 ஆம் அங்கம்

**14 – 08 – 1995**

**திங்கள் காலை**

★ 7-02 — மாவீரர்வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# கனடா கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

அரசு முன்வைத்திருக்கும் அரசியல் தீர்வு யோசனைகளை, சகல கட்சிகளும் வெகு நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கனடா கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# அளவெட்டி அருணாசலம் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 13

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் ஆண்டு 9 இல் கல்வி பயிலும் மாணவர்களை கனிஷ்ட தொழில் நுட்பபாட நெறிக்கான விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்கும்—

ஆண்டு 11 இல் கல்வி பயிலும் மாணவர்களை தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு நுழைவு அட்டைகளையும் நேர அட்டவணையையும் பெறவும்— நாளை திங்கட்கிழமை 9 மணிக்கு கோண்டாவில் மேற்கு இந்து மகா வித்தியாலயத்தில் சமுகமளிக்கு மாறு வித்தியாலய அதிபர் திரு ச. கைலாசநாதன் அறிவித்துள்ளார். [இ]

# இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த இதழியல் கற்கை நெறியின் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம் பெறும். [உ]

# திறந்த பல்கலைக்கழக மாணவருக்கு

திறந்த பல்கலைக்கழக பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கைநெறியில் பயிலும் சகல மாணவர்களுக்கும் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு "மாணவர் பொருத்தப்பாடும் ஆலோசனை கூறலும்" கற்கைநெறி யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும். (இ)


# 31-ஆம் நாள் நினைவில்---



## அமரர் சின்னக்கிளி நடேசலிங்கம்

(முன்னாள் உபதலைவர் - ஊரெழு வளர்பிறை ச.ச. நிலையம்)

ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையத்தின் உபதலைவராக இருந்து அருஞ்சேவை புரிந்து, பின்னர் வெளிநாடு சென்று வாழ்க்கையிலே — இயற்கை எய்தி மாதமொன்று சென்றாலும் உங்கள் நினைவு — என்றும் எங்கள் நெஞ்சை விட்டகலாது.

இவரின் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்தித்து, அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

— வளர்பிறை சனசமூக நிலையம்,
ஊரெழு.

[38018]



# "வேரும் விழுதுகளும்"
## கல்வியியற் கண்காட்சி

இடம்:
நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடி

10 – 08 – 1995இல் உத்தியோக பூர்வமான முறையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கண்காட்சி பார்வையாளர்களின் வருகைக்காக 15 - 08 - 1995 இலிருந்து திறந்து விடப்படும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

[38010]



# விசேட பொதுச் சபைக் கூட்டம்

மிக முக்கியமான விடயங்கள் கலந்தாலோசிக்க உள்ளதால் எமது கோட்டத்திற்கு உட்பட்ட சகல நிறுவனங்களின் இயக்குநர்களையும் 14 - 08 - 95 திங்கள் காலை 10.00 மணிக்கு புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில் (எழிலகம் முன்பாக) சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ தயவு செய்து இயக்குநர்கள் மட்டும் வருகை தருதல் வேண்டும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கோட்டம்

(சி/ 2051)

# லக்கி கல்வி நிலையம்

அளவெட்டி - சுன்னாகம்

எமது கல்வி நிலையத்தின் வகுப்புகள் யாவும் 14-8-95 திங்கட்கிழமை மாலை 3 00 மணி முதல்

கே. கே. எஸ். வீதி, இணுவில்

[நியூ லங்காபாம் அருகில்]

என்னும் முகவரியில் ஆரம்பமாகும் என்பதை எமது மாணவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

(37996) — நிர்வாகி



## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

# இடைக்காலத் தீர்வை

வழ. இல:- 02/94
தன்மை:- பணம்

கார்த்திகேச நடராசா,
5ஆம் வாய்க்கால், குருக்குடி கமம், சமறிக்குடா றோட், பரந்தன்.

வழக்காளி

எதிர்.

1. நடராசா சிவமூர்த்தி
பாம்புக்கமத்தடி கடை,
5ஆம் வாய்க்கால், பரந்தன்.
2. நடராசா இராசமூர்த்தி,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

2ஆம் எதிராளி.

குறித்த 2ஆம் எதிராளிக்கு;

மேற்படி வழக்கு ஒரு பணம் சம்பந்தமான வழக்காகும். இவ்வழக்கு 1995ஆம் ஆண்டு பங்குனி மாதம் 06ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் திரு. கோ. ஜனகன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவரது சட்டவாளர் செல்வி வி பூமாவதி அவர்களும் சமுகமாயிருக்க ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்காளியினால் 2ஆம் எதிராளிக்கு ஒரு லட்சம் ரூபா [1, 00, 000/-] பணம் கொடுத்து காணி வாங்கிக் கொடுத்தபடியால் அவ் ஒரு லட்சம் ரூபா பணத்தை வழக்காளிக்கு கட்டும்படியும் அது தவறின் வழக்காளியால் வாங்கித்தரப்பட்ட 14836 இலக்கத்தையுடைய காணி வழக்காளிக்கு போய் சேர வேண்டும் என்றும், மற்றும் வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்கு செலவை குறித்த 2ஆம் எதிராளி செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இதன்படி இத்தீர்வை தொடர்பாக 2ஆம் எதிராளியோ அவரின் சார்பில் அக்கறையுடைய எவரும் இன்றிலிருந்து 21 நாட்களுக்குள் இம்மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் தெரிவிக்காவிடின் இத்தீர்வை முற்றுமுழுதாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வழக்காளி சட்டவாளர்

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

[38004]



# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 10 — 1914

மறைவு: 24 — 07 — 1994

## திருமதி மங்களேஸ்வரக்குருக்கள் புவனேஸ்வரி அம்மா

திதி 13-08 – 1995

பாசத்தை பொழிந்து தன் உயிரினும் மேலாக எம்மை அரவணைத்து வழி நடத்திய அம்மாவே! ஆண்டு ஒன்று ஆனதம்மா உங்கள் ஆசைமுகம் பார்த்து. உங்கள் மறைவால் நாங்கள் மிகவும் மனம் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கூத்த பிரானை வேண்டுகிறோம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மயிலணி,
சுன்னாகம். [37840]


# தமிழர் மீதான தாக்குதல் குறித்து அமெ. தமிழ் அமைப்புகள் கவலை

## ராஜாங்க அமைச்சு அதிகாரிகளிடம் தெரிவிப்பு

நியுயோர்க், ஓக. 13

யாழ்ப்பாணத்தில் அரச படையினர் மேற்கொள்ளும் இராணுவத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்காவின் பல பகுதிகளிலும் உள்ள 12 தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் கவலையைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப் படுகொலையை நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அமெரிக்க அதிகாரிகளை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பின் போது அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புக்களின் பலம் குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் வெளிப்படையாக ஆச்சரியம் தெரிவித்தனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் விற்பது குறித்து ஆலோசிக்கப்படவில்லை என்றும் — இலங்கை விமானப்படையினருக்கு அமெரிக்க விமானப்படையினர் ஆலோசனை வழங்குகின்றனர் என்ற செய்தியைத் தாம் மறுப்பதாகவும் ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்

அமெரிக்காவில் உள்ள பின்வரும் தமிழ் அமைப்புக்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டன.

உலகத் தமிழ் இணைப்புக் குழு, உலகத் தமிழ் அமைப்பு, வட அமெரிக்க தமிழ்ச் சங்க சம்மேளனம், இலங்கைத் தமிழ் சங்கம், டெக்ஸஸ் தமிழ்ச் சங்கம், புளோரிடா இலங்கைத் தமிழ் சங்கம் வட போர்னியா தமிழர்கள் சர்வதேச தமிழ்மொழி மன்றம், ஒஹியோ இலங்கைத் தமிழ் சங்கம், தமிழ் அகதிகள் அமைப்பு, தமிழர் நலன்புரி மற்றும் மனித உரிமைகள் குழு (ஐ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 13 ஆம் நாளான இன்று மாலை ஆலயச் சூழலில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றலில் —

மாலை 6 மணி — 7 மணி வரை திரு. எஸ் குலசிங்கம் பாட்டு மாலை 7 மணி — 8-30 மணி வரை திரு. வி சிவஞானசேகரம் பாட்டு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் —

பிற்பகல் 3 மணிக்கு சிவத் தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் சமயப் பேருரை — ''திருவாசகம்''

★ மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை நித்தியானந்த சர்மாவின் விஷ்ணுபாகவதம் தொடர் இசைப் பேருரையில் ''மூன்றடி மண்'' [எ-30-111]

## சாவகச்சேரியில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 13

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட சகல தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், சட்டத்தரணிகள் புகையிலை வாணிபம் செய்வோர் சுருட்டு உற்பத்தியாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான தேசிய பாதுகாப்பு நிதி சம்பந்தமான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இக் கூட்டத்தில் மேற்படி அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிதித்துறையினர் கேட்டுள்ளனர். (ஒ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 13

''அனர்த்த கால சூழலும் பெண்களும்'' என்ற விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடத்த உள்ளது. (ஒ)

## பொன்சேகாவுக்கு திருமலையில் வாசஸ்தலம்

திருகோணமலை, ஓக. 13

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டாக்டர் காமினி பொன்சேகாவின் வாசஸ்தலம் 45 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. திருகோணமலை உவர்மலைப் பிரதேசத்தில் அமையும் இந்த வாசஸ்தலத்துக்கான அத்திவாரக்கல்லை ஆளுநர் பொன்சேகாவே அண்மையில் நட்டார். (ஒ)

# ஆலயம் மீதான தாக்குதலை நிறுத்த அரசு உத்தரவாதம் தர முடியுமா?

## நல்லை ஆதீன முதல்வர் கேட்கிறார்

சமாதானத்தை விரும்பும் ஓர் அரசின் முன் உள்ள முதல் கடமை ஆலயங்கள், பாடசாலைகள், வைத்திய நிலையங்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதாகும். ஸ்ரீலங்கா அரசு உண்மையாகவே சமாதானத்தை விரும்புகிறது என்றால் இனிமேல் நவாலிக்குண்டு வீச்சுப் போன்ற சம்பவங்கள் நடக்காதிருக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும். இந்த அரசு அதற்குத் தயாரா?

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி சென். பீற்றர் தேவாலயச் சுற்றாடலில் இடம்பெற்ற ''புக்காரா'' குண்டு வீச்சில் பலியான பொதுமக்களின் ஆன்மசாந்தி அஞ்சலிப் பிரார்த்தனையில் உரையாற்றிய போதே சுவாமிகள் இப்படிக் கூறினார்.

நவாலி தேவாலயம் முன்பாக கடந்த புதன்கிழமை இந்த அஞ்சலிப் பிரார்த்தனை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

போர் நிகழும் வேளைகளில் மக்கள் ஆலயங்கள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் தஞ்சமடைவதன் மூலம் தம்மைப் பாதுகாக்க விழைகின்றனர்.

போரின் நெடுபிடிகளிலும், துயரங்களிலும் இருந்து தம்மைக்காத்தருளுமாறு இறைவனைப் பிரார்த்திக்கும் மக்கள் மிகக்கூடுதலான அளவில் ஆலயங்களையே நாடிச் செல்கின்றனர்.

ஆலயங்களைச் சரணடையும் மக்கள் மீது கொடூரத் தாக்குதல்களையும், குண்டு வீச்சுக்களையும் நிகழ்த்துவதன் மூலம் மதவழிபாட்டு உரிமைகளைத் தடைசெய்யும் முயற்சியிலும் ஸ்ரீலங்கா அரசு முனைப்புடன் இறங்கியுள்ளதாகவே கருதமுடியும்.— என்றார்.

அருட்திரு கில்லறி ஜெபநேசன் அடிகள் தலைமையில் அஞ்சலிப் பிரார்த்தனை நடைபெற்றது.

யாழ். ஆயர் அதி வண தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை உட்பட பலர் அங்கு உரையாற்றினர்.

(ஐ-111)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### வேலை துணைவிடு முருகா!

ஆற்றலும் துணிவும் உறுதியும் ஓர்மமும்
அனைத்துள தமிழரின் அறமும்;
போற்றுதற் குரியமா வீரரின் தியாகமும்
பொற்புசடக் கரும்புலிப் பெட்பும்,
ஏற்றமாம் மக்களின் எழுச்சியும் தலைவனின்
எண்ணிலாத் திறன்களும் வரங்களும்
தோற்குமா நல்லூர் முருகனே உன்வேற்
துணைவிடு துயரெலாம் கெடுமே!

— முருகனடியான்

### இன்னல் களைந்திட வா!

தங்கவேல் தாங்கித் தரணிதனைக் காத்து
தஞ்சம் எமக்களிக்கும் தலைவா நீ
எங்கள் குரல் கேட்டு எதிரிபகை ஓட்டி
இன்னல் களைந்தெறிய வருவாயே

பொல்லா வினையகற்றிப் போதைதனைப் போக்கி
பொங்கும் வாழ்வளிக்க வல்லோனே
நல்லவளம் கொண்ட நல்லைநகர் நாதா
நாளும் நின்தாழ் நாம் வணிவோமே.

— பா. சிவபாலன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

500W யமஹா ஜெனரேற்றர், 500W மின் சீராக்கி (Stabi Guard) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: யூனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர், இல. 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-2046)

5½ குதிரை சக்தி (H. P.) கொண்ட பெற்றர் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. கந்தசாமி, 82/7, 3ஆம் லேன், பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். [8635]

யமஹா (Yamaha) EF 2000 H. K. 1.4 K. W. புதிய ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு. "கோமதி" சித்தன் கேணி. (38003)

### மலிவு விற்பனை

ஆகஸ்ட் - 07 தொடக்கம் மருத்துவ, விஞ்ஞான வணிகத்துறைகளை சேர்ந்த ELBS நூல்களும், இதர நூல்களும் மலிவு விலையில் விற்கப்படும். யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1725]

### சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பெண்களுக்கான Eastern சைக்கிள் விற்பனைக்குண்டு 217/A, ஆஸ்பத்திரிவீதி (சிறீதரன் மரக்காலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (38009)

### யாழ். கோட்டை

யாழ்ப்பாணம் கோட்டையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் விளக்கும் வரலாற்று ஆவணம் களம் பல கண்ட யாழ்—கோட்டை, அறிமுக விலை ரூபா 60/- நல்லூர் ஆலய வீதியில் உள்ள பூபாலசிங்கம், ஸ்ரீ ஸ்ரீ. தமிழ்த்தாய் புத்தகசாலைகள். (37995)

### SPOKEN ENGLISH

விரிவான விளக்கத்துடன் Spoken English with Grammar கற்பிக்கப்படும் ஆங்கிலப் புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்த்தும் கொடுக்கப்படும் V. N Kandasamy. A I B Part I (London) Inter (London) Dip-in-English இலக்கம் 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்குச் சமீபத்தில்) கொக்குவில். (38007)

### மணமக்கள் தேவை

குற்றமற்ற 30 வயது எக்கவுண்டனுக்கும், 34 வயது என்ஜினியருக்கும் குற்றமுள்ள 34 வயது டாக்டருக்கும், 33 வயது விரிவுரையாளருக்கும், கத்தோலிக்க 45, 50 வயதுப் பெண்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [37970]

### மணமகன்மார் தேவை

28 வயது விரிவுரையாளருக்கும், 32 வயது உதவி டாக்டருக்கும், 30 வயது எக்கவுண்டனுக்கும், 30 வயது சைவ போசன பட்டதாரிக்கும், குற்றமுள்ள 30 வயது டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (37971)

யாழ்ப்பாண தமிழ் கிறிஸ்தவ பெற்றோர் தமது மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகிறார்கள். மணமகளின் வயது 28. உயரம் 5'2" பொது நிறம். அழகும் அடக்கமும் நிறைந்தவர். A/L பரீட்சையில் சித்தி அடைந்தவர் தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு இல. 976 மே/பா உதயன் (8631)

### கல்வியும் உளவியல்

கல்வியும் உளவியலும் பகுதி II ஆக்கம்:- கலாநிதி ச. முத்துலிங்கம், (முன்னாள் பேராசிரியர் கல்வி உளவியல் துறை, கலைப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1997)

### வெளிவந்துவிட்டது

G.C.E. (A/L) 95 வர்த்தக மாணவர்களுக்கு உரிய நடைமுறை விடயங்கள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர்கள் திரு க. தேவராஜா, திரு.இ. இரட்ணம். வெலிங்டன் சந்திக்கு அருகில் அறிவகம் புத்தகசாலையிலும், C. C. A. யிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-2038)

### திருமண சேவை

37 வயது, விசாகம், செவ்வாய் 12, என்ஜினியருக்கு படித்த மணமகள் தேவை. எம்மிடம் சகல தொழில்களில் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமணசேவை, மகிலாகம், தற்போதைய முகவரி:- இல. 178, பிறவுண் வீதிச்சந்தி, நாவலர் வீதி, (பசுமை வேளாண்மைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (37981)

### பற்றரி சார்ஜ்

சகலவித மின்னேற்றக் கலன்களை (Rechargable-Batteries) விஞ்ஞான முறையில் மின்னேற்றம் செய்து கொடுப்பதில் 18 வருட அனுபவமிக்கவர்கள், வானொலிக் கருவிகளை திருத்தி குறித்த தவணையில் தர தொடர்பு ஏற்படுத்தவும். சக்தி தொழிலகம், இல. 15, விக்ரோறியா வீதி, (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி), யாழ்ப்பாணம். (37985)

### காணவில்லை

கருமை நிறமுடைய 8 மாதச் சினையுள்ள கன்னி நாகு, பட்டி பார்த்த 2" கொம்புடையது. கடந்த சனிக்கிழமை (5 8-95) மேய்ச்சலுக்கு போய் வீடு திரும்பவில்லை. காண்பவர்கள் அருளானந்தம் பிறேம்சந். 66, கரன் தியேட்டர் ஒழுங்கை எனும் முகவரிக்கு அறிவிக்கவும். (38008)

### தவறிவிட்டது

குணசீலி - தியாகராஜா ஆகிய எனது அடையாள அட்டை [இல. 755161268 V] உடுவிலுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக விலாசத்தின்படி கிடைக்க ஏற்பாடு செய்யவும். [38005]

### சனி [வக்கிர] மாற்றம்

9-8-95 சனி மாற்றம் விற்பனையாகிறது. ரூபா 10/- பாடசாலை அலுவலக உபகரணங்கள், இந்திய, இலங்கைச் சஞ்சிகைகள், வாழ்த்துக்கள், பத்திரிகைகள் விற்பனைக்கு உண்டு. ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/13, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். [8636]

### மணமகள் தேவை

யாழ் இந்து, வயது 31, உயரம் 5' 7" A/L Science சித்தியடைந்து உயர்கல்வி கற்ற நல்லொழுக்கமுள்ள சுவிற்சர்லாந்தில் தொழில் புரிபவருக்கு படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. பெண்ணை அழைக்க Sponsor செய்யப்படும். விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 822, மே/பா உதயன். (37963)

### தேவை

பெண்கள், சிறுவர், குழந்தைகளுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கத் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா ரேட் சென்ரர், (எழிலகம் முன்பாக) இல: 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (37931)

250 W DC-AC மின்மாற்றி (Inverter) பற்றரி சார்ஜருடன் தேவை வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். யூனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர், இல: 37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (2047)

## வெளிவாரிப் பட்டப் படிப்புப் பதிவு 1994 / 95

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1994 / 95 கல்வியாண்டிற்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலை தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்புக் கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணிக் கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்: இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறீஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விவரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிநிலைப் பதிவுகள், பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இருக்கும் மக்கள் வங்கிக் கிளையில் 50/- செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றைப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூ 50/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையுடன் சுய முகவரியிட்ட ரூ. 12/50 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையினை அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

— பதிவாளர்.

வெளிவாரிப் பதிவுகள்,
பரீட்சை அலகு,
09 - 08 - 1995
[சி-2043]

## St. John's College, Jaffna
## AND
## Chundikuli Girls' College, Jaffna
# ADMISSION - 1996

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உள.
   ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு
2. அ. விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-95 முதல் 15-09-95 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ. எக்காரணம் கொண்டும் 15-09-95க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   இ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   ஈ. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22-09-95, 22-09-95க்குப் பின் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆண்டு ஒன்றுக்கான படிவத்திற்கு ரூபா 100/- ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு ரூபா 150/- செலுத்தவேண்டும்.
7. வயதெல்லைகள் :
   அ. ஆண்டு ஒன்று —
   விண்ணப்பதாரி 01-02-90 க்கும் 31-01-91 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆண்டு ஆறு —
   விண்ணப்பதாரி 01 - 02 - 85 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 21 - 10 - 95 காலை 8 - 30 மணிக்கு ஆரம்பமாகும்.
9. ஆண்டு 4 முதல் ஆண்டு 10 வரையிலான பரி. யோவான் கல்லூரி மாணவருக்கு இவ்வாண்டு 3ஆம் தவணையிலிருந்து விடுதி வசதிகள் உள.
   விண்ணப்பங்கள் 15 - 09 - 95 வரை ஏற்கப்படும்.

— அதிபர்கள்.

(சி-2013)

## 31 ஆம் நாள்
# நினைவலைகள்

தாயின் மடியில்: 24 — 10 — 1957



தாயக மண்ணில்: 14 — 07 — 1995

## அமரர் ச. வசந்தகுமார் [காந்தி]

[மினி வெதுப்பக உரிமையாளர்]

அன்பை பரிசாக அள்ளிக் கொடுத்த அப்பாவே!
உன் மழலைகள் நாம் கேட்க சோகத்தை ஏன் பரிசாகக் கொடுத்தாய்?
உன் செல்ல மழலை மொழி கேட்க நீ இங்கு இல்லை.
31 நாட்கள் ஆனதப்பா நீ எங்கே போனாய்?
கண்ணீரோடு அம்மாவுடன் காத்திருக்கோம் ஓடிவா
எம் செல்ல மொழி கேட்க நீ எழுந்து ஓடிவா வா,

உங்கள் பிரிவின் துயரால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
தகப்பன, தாய், சகோதரங்கள்,
மாமி, மைத்துனர்கள்,
உற்றார், உறவினர்கள்

மினி வெதுப்பகம்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [37953]

**உதயன்**

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சரியாகப் புரிந்து கொள்க

இனப்பிரச்சினைக்கென சந்திரிகா அரசாங்கம் வெளியிட்டுள்ள தீர்வு யோசனை குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கினார்.

அரசாங்கம் வெளியிட்ட யோசனையின் தகைமை பற்றியோ சாதக பாதகங்கள் குறித்தோ கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று திரு. பாலசிங்கம் கூறினார்.

அரசு தனது தீர்வு யோசனையை வெளியிட்டதன் நோக்கத்தை மட்டுமே அவர் விளக்கினார்.

அரசாங்கம் தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இராணுவத் தீர்வையே தெரிவு செய்துள்ளது. அந்த இராணுவத் தீர்வை நியாயப்படுத்தவே அதிகாரப் பரவலாக்கல் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதுவே உண்மையுமாகும். கடந்த ஒரு வருடகாலமாக அரசியல் தீர்வு குறித்து ஒளித்துப் பிடித்து விளையாடிய சந்திரிகா —

தமிழர்களுக்கு எதிராக போரை அறிவித்துவிட்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் எடுப்பில் "முன்னேறிப் பாய்தல்" என்ற இராணுவத் தாக்குதலை நடத்தி —

ஐந்து நாட்களில் 250 க்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்றும், பல கோடி ரூபாவுக்கு உடைமைச் சேதம் ஏற்படுத்தியும், சுமார் மூன்று லட்சம் மக்களை இடம்பெயரச் செய்தும் பேரனர்த்தம் புரிந்த பின்னர் —

திடீரென தீர்வு யோசனை ஒன்றை சமர்ப்பித்திருப்பது போரை நியாயப் படுத்துவதற்கு அன்றி வேறு எதற்காக? இது பெரும் விஷமத்தனமானதும், வெளி உலகத்தை ஏமாற்றுவதற்குமான ஒரு தந்திரமும் ஆகும்.

அரசியல் தீர்வு யோசனை ஒன்றைச் சமர்ப்பித்திருக்கும் அரசு, அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே பொருத்தம். அது தோல்வி கண்ட பின்னர் இராணுவத் தீர்வை நாடுவது ஓரளவு விளங்கிக் கொள்ளக் கூடியது.

ஆனால், முதலில் தமிழருக்கு எதிரான போரை முடித்துக்கொண்டு, அதன் பின்னரே தீர்வு அமுல் செய்யப்படும்; போரினூடாகவே சமாதானத்தை அடையப் போகிறோம்; என்று சந்திரிகா கூறுவது பெரும் கபடத்தனமாகும்.

இதனை தமிழ் மக்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். தெற்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை ஒரு போதும் அதன் இப்போதைய வடிவத்தில் இருக்கப்போவதில்லை. பல வெட்டுக் கொத்துக்கள், கூட்டல், கழித்தல்களுடன் வேறு வடிவத்திலேயே தீர்வாக வரும். எனவே இது குறித்து தமிழ் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் கவனமாகவும், அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

# தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் நிலையங்கள்

| உ. அ. அ. பிரிவு | மக்கள் தொடர்பு முகவரி | மக்கள் தொடர்புநாளும் நேரமும் |
|---|---|---|
| *வலிகாமம்* | | |
| யாழ்ப்பாணம் | 33 பருத்தித்துறைச் சாலை ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். | வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்கள் மு ப. 9-00 — 11-00 மணி வரை |
| நல்லூர் | அ) மாணவர் அமைப்பு நடுவப் பணியகம், காங்கேசன்துறைச் சாலை, கொக்குவில். | ஞாயிறு. திங்கள் செவ்வாய், சனி மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| | ஆ. பலாலிச் சாலை, திருநெல்வேலி. [டயஸ் வீதி முன்பாக] | ஞாயிறு. புதன், வியாழன் மு ப. 9-00 — 11-00 மணி வரை |
| கோப்பாய் | அ. நெசவு நிலையம், பருத்தித்துறைச் சாலை, புத்தூர். | வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்கள் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| | ஆ. பருத்தித்துறைச் சாலை கோப்பாய் சந்தி, கோப்பாய். | வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்கள் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| *தென்மராட்சி* | | |
| சாவகச்சேரி | அ. வட்டச் செயலகம், மானிப்பாய் சாலை கைதடி. | செவ்வாய், புதன் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| | ஆ. போராளிகள் - குடும்ப நலன் காப்பகம் கேரதீவு வீதி, கோவிலாக்கண்டி, நாவற்குழி. | வெள்ளி, சனி மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| | இ. நுணாவில் கனகம்புளியடி வீதி, மடத்தடிச் சந்தி, மட்டுவில். [மட்டுவில் மத்திய மகாவித்தியாலயம் அருகில்] | ஞாயிறு, திங்கள், புதன் மு ப. 9-00 — 11-00 மணி வரை |
| | ஈ. கலைபண்பாட்டுக் கழகச் செயலகம், முதன்மைச் சாலை, மீசாலை, [ஐயா கடையடி] | ஞாயிறு, திங்கள், புதன் மு.ப. 9 00 — 11-00 மணி வரை |
| | உ. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செயலகம், கச்சாய் சாலை, கொடிகாமம். | ஞாயிறு, திங்கள், புதன் மு ப. 9-00 — 11-00 மணி வரை |
| பச்சிலைப்பள்ளி | பளை வட்டச் செயலகம், பிரதான சாலை, பளை | செவ்வாய், வியாழன், சனி மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| *வடமராட்சி* | | |
| கரவெட்டி | அ. நவிண்டில் வீதி, இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி. [ப. நோ. கூ. ச. அருகில்] | வியாழன், வெள்ளி, தவிர்ந்த ஏனைய நாள்கள் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| | ஆ. கொடிகாமம் வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி. [கோவிந்தசந்தை அருகில்] | வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்கள் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| பருத்தித்துறை | அ. காங்கேசன்துறைச் சாலை, வல்வெட்டித்துறை. [மீனாட்சி அம்மன் கோவிலடி] | ஞாயிறு, திங்கள், புதன் பி.ப. 2-00 — 4-00 மணி வரை |
| | ஆ. பருத்தித்துறைச் சாலை, சாரையடி, பருத்தித்துறை. | வியாழன், வெள்ளி, தவிர்ந்த ஏனைய நாள்கள் மு.ப. 9-00 — 11-00 மணி வரை |
| வடமராட்சி கிழக்கு | நாகர் கோவில் சந்தி நாகர்கோவில். [தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலக அருகில்] | செவ்வாய், வியாழன், சனி பி.ப. 2-00 — 4 00 மணி வரை |

## அத்தியாவசிய மருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிக்கப்படுகின்றது.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வடக்கே வருவதை பல்வேறு வழிகள் மூலம் தடுத்துள்ள ஸ்ரீலங்கா அரசு, மருந்துப் பொருள்களையும் வடக்கே செல்லவிடாது தடுப்பதன் மூலம் வடக்கில் ஓர் ஆபத்து நிலையை ஏற்படுத்த திட்டமிடுவதாகக் கருதப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகளை எடுத்து வருவதற்கும் பாதுகாப்பு அமைச்சு தற்போது அனுமதி மறுத்துள்ளது.

இதனால் இங்குள்ள நோயாளர்களை காப்பாற்றுவதற்கு தேவையான மருந்து வகைகள் இல்லாது அவர்கள் பாதிக்கப்படும் மிக அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டு வருவதாக வைத்திய வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு மூன்றாம் காலாண்டுக்கு தேவையான மருந்து வகைகள், தடுப்பூசி மருந்துகள், மலத்தியோன், திரிபோஷா மா போன்றவற்றை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரியிருந்தார்.

ஆனால் இவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு தற்போது அனுமதி மறுத்துள்ளதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

ஏற்புவலி, விசர்நாய்க்கடி, குக்கல், தொண்டைக்கரப்பன், போலியோ போன்ற நோய்களுக்கான தடுப்பூசி மருந்து வகைகளையும் எடுத்து வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் நோய்த் தடுப்பில்லாமல் பெரும் பின்விளைவுகள் உண்டாகும் ஆபத்துத் தோன்றியுள்ளது.

இதே வேளை —

போதனா வைத்தியசாலை உட்பட அரசினர் வைத்திய சாலைகளில் மருந்து வகைகளுக்கு ஏற்கனவே தட்டுப்பாடு நிலை உருவாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-4]

### விளையாட்டு வினையானது:

## தொண்டையில் சிக்கிய விசில் சிறுவனைப் படுத்திய பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 13

விளையாட்டுப் பொருளான விசிலின் நாக்குத் துண்டு தொண்டைக்குள் சிக்கி மூச்சுத் திணறிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் —

பல மணி நேரம் உயிருக்காகப் போராடிய பின் அதிர்ஷ்ட வசமாக உயிர் பிழைத்தான்.

யாழ். ரயில் நிலைய முகாமில் வசிக்கும் அனோஜன் (வயது 5) என்ற சிறுவனே இவ்வாறு உயிர் தப்பினான்.

வாயில் வைத்து ஊதிக் கொண்டிருந்த விசிலை உட்பக்கமாக வாயினுள் இழுத்ததால் அதன் நாக்குத் துண்டு உடைந்து தொண்டை வழியாகச் சென்று சுவாசத் தொகுதியில் சிக்கிக் கொண்டது.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும், பின்னர் சத்திர சிகிச்சைப் பிரிவிலும் டாக்டர்கள் பல மணி நேரம் போராடியும், சிறுவனின் சுவாசத் தொகுதியில் விசிலின் நாக்கு எங்கே சிக்கிக் கொண்டுள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமற் போனது.

பின்னர் சத்திர சிகிச்சை செய்து அதனை வெளியே எடுப்பது என டாக்டர்கள் முடிவுசெய்தனர்.

சிறுவனோ சுவாசிப்பதற்கு திக்குமுக்காடிக் கொண்டிருந்தான்

அச்சமயம் திடீரென அவனுக்கு இருமல் ஏற்பட்டது. அவ்வளவுதான், தொண்டைக்குள் ஒளிந்திருந்த விசிலின் நாக்குத் துண்டு "லபக்" என்று வெளியே வந்தது!

அதனால் சத்திர சிகிச்சை இன்றியே சிறுவன் அதிர்ஷ்ட வசமாக உயிர் பிழைத்தான்.

[ஐ-15]

தமிழீழம் எங்கள் தாயகம்; அதன் சிறப்பை
நல்லூர் பொருண்மிய கண்காட்சியில் பாருங்கள்

### ஒற்றையாட்சிக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீர்வைச் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும் — என்றும் சந்திரிகா கூறினார்.

(அ)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## தென்மராட்சிக் கோட்டம்

காலம்: **14-08 95** காலை 10 மணி

இடம்: சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில்.

**[தமிழீழ நிதிப்பொறுப்பாளர் கலந்து, உரையாற்றுவார்]**

அங்கத்தவர் அனைவரும் தவறாது
சமுகம் தரவும்

(சி/2052) **செயலாளர்**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## சிவயோகம் குமாரசுவாமி
### [சின்னக்கிளி]

சாவகச்சேரி, கச்சாய் வீதி, கோவிக் குடியிருப்பை பிறப்பிடமாகவும், பூநாறிமரத்தடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் குமாரசுவாமி 11 - 08 - 95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசுவாமியின் அன்பு மனைவியும், சிவகுமாரன் [முன்னாள் அதிபர் — பூநகரி மகா வித்தியாலயம்] அவர்களின் அன்புத் தாயாரும், ஜெயானியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான லலிதாம்பிகை, இராசவள்ளி, சோதீஸ்மதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முரளி, ரம்யா, தம்பா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 08 - 95 அன்று 1219, கே. கே. எஸ். வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரட்னசோதி பாலேந்திரா
[பெறாமகள்]

[38017]

## தில்லைநாயகம்பிள்ளை தவநாயகம்

பண்டத்தரிப்பு, வடலியடைப்பை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பளையில் வசித்தவருமாகிய, தி. தவநாயகம் சவுதிஅரேபியாவில் சுகவீனமடைந்து கொழும்பில் 10 - 08 - 95 இல் காலமானார்.

இவர் பஞ்சலட்சுமி, காலஞ்சென்ற தில்லைநாயகம்பிள்ளையின் அன்புமகனும், அன்னபரிபூரணம், காலஞ்சென்ற பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும், மங்கையர்கரசியின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்சினி [மகாஜனக்கல்லூரி மாணவி] ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி சிவபாலராஜா [கனடா], திருமதி தில்லைநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற குணநாயகம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், இரத்தினபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயபாலசிங்கம் [அபுதாபி], திருமதி புவனேந்திரன், திருமதி மனோகரன் [கொழும்பு], திருமதி குகநாதன் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 08 - 95 அன்று கொழும்பில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. ஜெயபாலசிங்கம்
(மைத்துனர்)
சோ. புவனேந்திரன்
(சகலன்)

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[38013]

## அப்பாக்குட்டி முருகேசு
### (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், விடத்தற்பளையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அப்பாக்குட்டி முருகேசு (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் லோகநாதன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்], லோகநாயகி [விடத்தற்பளை], லோகேஸ்வரி (லண்டன்), லோகராணி (சுவிஸ்), லோகாம்பிகை [ஆசிரியை, விடத்தற்பளை), லோகமலர் [சுவிஸ்), லோகராயினி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயதேவி (ஆசிரியை, சமிகாவை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்], காசிநாதன் (விடத்தற்பளை), சிவகுருநாதன் (லண்டன்], நாகேஸ்வரன் [சுவிஸ்), வேலாயுதம் (சுவிஸ்), கந்தசுவாமி (சுவிஸ்], சுவிதகுமாரி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [13-8-95] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. லோகநாதன்
[மகன்]

விடத்தற்பளை,
மிருசுவில்.

[38014]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 13

உடுவில் தெல்லிப்பளைக் கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற இருப்பதாக, பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர். (எ)

## பொய்ப் பிரசாரத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுழற்றி எறிந்து விட்டார்.

ஒரு லட்சம் இராணுவ வீரர்களுடன் அரசு விடுதலைப் புலிகளை எதிர்த்துப்போராடுகிறது. பத்து இராணுவத்தினருக்கு ஒரு போராளி என்ற வீதத்தில் போராடும் போராளிகளின் தாக்குதல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

அமைதிப் பேச்சுவார்த்தையை இடையில் முறித்தது புலிகள் தான் என அரசு கூறியது. சர்வதேச நாடுகளும் அதை ஏற்றுக் கொண்டன.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

அமைதிப் பேச்சுக்களில் அரசு காட்டிய அசமந்தப் போக்கு, நேர்மையின்மை காரணமாக சொல்வது ஒன்று செய்வது வேறாகவும், புலிகள் எதிர்பார்த்தது ஒன்று அரசு ஏற்றுக்கொண்டது வேறாகவும் இருந்தது. பிரச்சினை நீடித்தது.

புலிகள் ஆரம்பித்துவிட்டார்கள். நாம் சும்மா இருப்போமா என்று கூறி வாரி வரிந்துகட்டிக் கொண்டே முப்படையினரும் விடுதலைப் புலிகளைத் தாக்கினர்.

ஆனால் ஒவ்வொரு தாக்குதலிலும் அப்பாவிப் பொது மக்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதில் மட்டும் அரசும், சர்வதேச நாடுகளும் கண்களை மூடிக் கொள்கின்றன.

புலிகளுக்கு எதிராக நடத்திய போரில் தாம் மாபெரும் வெற்றி பெற்று விட்டதாக அரசு மார்தட்டிக் கொண்டது.

ஜனாதிபதியும் அதிகாரப் பரவலாக்கல் என்னும் அமைதிக்கான புதிய தீர்வை முன் வைத்தார்.

அரசின் இந்தப் புதிய திட்டத்தை எதிர்க்கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை.

பௌத்த துறவிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தியா, ஆஸ்திரேலியா, போன்றவை அரசின் யோசனைத் திட்டத்தை வரவேற்றுள்ளன.

ஆனால் விடுதலைப் புலிகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆதரவு இல்லாமல் வடக்கு கிழக்கில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதை அரசு மறைமுகமாக ஆயினும் ஏற்றுக் கொள்ளும்.

ஆனால் அரசின் புதிய தீர்வு யோசனைத் திட்டத்தின் நோக்கங்களில் புலிகளுக்கு எதிரான இராணுவ தாக்குதலை நிறுத்தும் அம்சம் இடம் பெறவில்லை. — என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## தனி நபர்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும், பற்றுச்சீட்டைப் பெறாமல் எவரிடமும் தயவு செய்து காசு கொடுக்க வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறோம். — என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மட்டக்களப்பில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை விட்டு வெளியேற்றிய பின்னர் அவற்றை சோதனை இட்டனர் இந்த நடவடிக்கையின் போது மீன்பிடி தொழிலாளர்கள் உட்பட அப்பாவித் தமிழர்கள் பலரை படையினர் கைது செய்துள்ளனர். (இ-4)


## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE
### 4 MONTHS

ஆரம்பம்:

திங்கள், புதன் வகுப்புக்கள்
**21 - 08 - 1995** 10-30 மணி

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
**26 - 08 - 1995** 8-30 மணி

Lectures By
**S. P. Sivapathasundaram**
M. I. D. P. M. (Lond )

- ★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/-
- ★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
- ★ Short - Hand & Typing, Lotus 1 — 2 — 3 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மேலும் விவரங்கட்கு

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.

[C/2049]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகம்மா ஐயம்பிள்ளை

கட்டுவனைச் சேர்ந்த யோகம்மா காலமாகிவிட்டார். இவர் ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், சுசிலாதேவி, மஞ்சுளாதேவி, வாசன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசமூர்த்தி (லண்டன்), சுப்பிரமணியம் (கொழும்பு), மணிமாலா ஆகியோரின் மாமியாரும், திலீப்காந், ஜெயகாந், மயூரன், மதன், சஜீபன் ஆகியோரின் பேர்த்தியும், அரியமலர், திருநாவுக்கரசு (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (13-8-95] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக இல 674, பருத்தித்துறை வீதியிலுள்ள இல்லத்திலிருந்து செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
S V ஐயம்பிள்ளை
(கணவர்)

674, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(38020)

## அருணாசலம் கணேசன்
### (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

மானிப்பாயை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகக் கொண்ட அருணாசலம் கணேசன் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

இவர் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அ. சி. சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி கீதாவின் [கணக்காளர்] அன்புத் தந்தையும், சிவபாலன் (பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், (மலேசியா), மற்றும் இராசலிங்கம் [கனடா], சிவபாக்கியம் [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சு. நவமணி, இ. நவமணி, காலஞ்சென்ற கனகநாயகம், மற்றும் விமலாம்பிகை, சரோஜினி தேவி, நித்தியமலர், சுந்தரலிங்கம் [எழுதுவினைஞர் இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்], சகுந்தலா தேவி [லண்டன்], யோகலிங்கம் [அமெரிக்கா], கருணாதேவி ஆகியோரின் மைத்துனரும், பாஸ்கரன் [இளைப்பாறிய ஆளணி உத்தியோகத்தர், இலங்கை மின்சாரசபை], ஆனந்தலிங்கம் [மக்கள்வங்கி யாழ். பிராந்திய காரியாலயம்] சோதிநாதன் [கொழும்பு], பரதராஜா [பொறியியலாளர் - லண்டன்], குகானந்தன் (கொழும்பு) ஆகியோரின் சகலனும் திருமதி வசந்தமலர் சுந்தரலிங்கம் [ஆசிரியை கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்), திருமதி பாலேஸ்வரி யோகலிங்கம் [அமெரிக்கா] ஆகியோரின் ஒன்றுவிட்டசகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சுந்தரலிங்கம்
[மைத்துனர்]

லீலாவாசம்,
கோண்டாவில் கிழக்கு.

[38019]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.